# INDIAN SCHOOL SALALAH

## SECOND TERM EXAMINATION, FEB - MARCH 2026

**Class: V-G** **தமிழ்[SL]** **Date:10.3.2026**

**Time: 2 HOURS** **Maximum Marks: 40**

Roll No: (In numerals)………………………………………… Section: ………………...

(In words) ……………………………………………………………………………..

Name of the Candidate: ………………………………………………..…………………

Parent's/Guardian's name: ………………………………………………………………

Day and Date of Examination: ……………………………………………………………..

Signature of the Candidate: ………………………………………………………………

Signature of the Invigilator: ……………………………………………………………...

| | |
|---|---|
| Section A | |
| Section B | |
| Section C | |
| Grand Total | |

Signature of the Examiner with date: ………………………………………………………..

Signature of the Checker with date : ………………………………………………………

## பகுதி-1

**I.சரியானச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.** **10 X 1 = 10**

1. "**கொடைத்திறம்**" என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது. ________________

அ, கொடை + திறம் ஆ, கோடை + திறம் இ, கொடு + திறம்

2. கண்ணகியின் சிலம்பு __________ ஆல் ஆனது

அ,முத்து ஆ, மாணிக்கம் இ, வைரம்

3. "**கசடற**" இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் _____________

அ, குற்றம் நீங்க ஆ,தவறான இ, தெளிவின்றி

4. "**தகுதி + உடைய** " சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_______________

அ, தகுதிஉடை ஆ, தகுதியடைய இ, தகுதியுடைய

5. "**செங்கோல்**" என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது ---------------------------------

அ, செம்மை + கோல் ஆ, செம் + கோல் இ, செங் + கோல்

6. **களிறு** என்பது ____________________ யைக் குறிக்கும்

அ, யானை ஆ, ஒட்டகம் இ, குதிரை

7. "**வளமதை**" - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

அ, வளம் + அதை ஆ, வள + அதை இ, வளம் + மதை

8. "**மூன்று + தமிழ்**" இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது -------------------------

அ, மூன்றுதமிழ் ஆ, முத்தமிழ் இ, முத்துதமிழ்

9. கூண்டிலிருந்த _________யைச் சுதந்திரமாகப் பறக்கவிட்டான் எழிலன்.

அ,கிளி ஆ,கிலி இ,கிழி

10. தமிழுக்கு அமுதென்று பேர் எனப் பாடியவர் ---------------------------

அ, பிரபஞ்சன்      ஆ, வாணிதாசன்      இ, பாரதிதாசன்

**II.பொருத்துக.** **5 X 1 = 5**

| | |
|---|---|
| **1. பாரதிதாசன்** | **அ) கொடி முல்லை** |
| **2. தமிழ்ஒளி** | **ஆ) பாஞ்சாலி சபதம்** |
| **3. பாரதியார்** | **இ) பாவலர் பண்ணை** |
| **4. வாணிதாசன்** | **ஈ) மாதவி காவியம்** |
| **5. திருமுருகன்** | **உ) இருண்ட வீடு** |

**விடை:** 1,_____ 2,______ 3,______ 4,______ 5,_________

**III. பொருத்தமான சொல்லைக் நிரப்புக.** **5 X1 = 5**

1. ஒட்டகம் என்பது ஒரு ____________. **(விளங்கு/ விலங்கு)**
2. தென்னை என்பது, ஒரு ___________. **(மறம்/ மரம்)**
3. மரத்தில் தாவுவது ____________. **(குறங்கு / குரங்கு)**
4. பறந்து செல்வது ______________. **(பரவை / பறவை)**
5. சுவரில் அடிப்பது _____________. **(ஆணி / ஆனி)**

**பகுதி-2**

IV. **வினாக்களுக்கு விடையளிக்க.** **8 X 2 = 16**

1. **கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் யாது?**

________________________________________________________________________

------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. கல்வியை எவ்வாறு கற்க வேண்டும்?

3. பாரதியார் படைத்த முப்பெருங்காவியங்கள் யாவை?

4. எது தெய்வமாகும்?

5. உழவுத்தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

6, பாண்டிய மன்னனின் வெண்கொற்றக் குடை வீழக்காரணமென்ன?

7 அனைவரும் இன்பமுடன் தெம்பு தரும் தொழில் எது?

8. பாவேந்தர் விருதைப் பெற்றவர்கள் யாவர்?

## பகுதி-3

**V. கீழ்காணும் உரைப் பகுதிக்குப் பொருந்துமாறு இரட்டைக்கிளவி / அடுக்குத் தொடர்களைத் தேர்ந்தெடுத்த நிரப்புக.** **8 X ½ = 4**

**(கருகரு, சலசல, தாவித் தாவிச், சடசட, பொத்து பொத்து, மடமட, துள்ளித் துள்ளி, படபட)**

அடர்ந்த காடு. ஒன்றையொன்று துரத்தி விளையாடிக்கொண்டிருந்த குரங்குகள், திடீரெனக் குரலெழுப்பியவாறு, ஒவ்வொரு மரமாக ஏறியும் இறங்கியும் கிளைக்குக் கிளை ________________ சென்றன. அவை எழுப்பிய ஓசையினால், பறவைகள் தத்தம் சிறகுகளைப் __________வென அடித்துக்கொண்டு பறந்தன. அருகிலிருந்த சிற்றாற்றில், நீர் _________வென ஓடிக்கொண்டிருந்தது. நீர்நிலை தேடிக் கூட்டங்கூட்டமாக வந்த யானைகள், அந்த ஆற்றைக்கண்டு, களிநடனமிட்டன. அருகில் வளர்ந்திருந்த தென்னை மரமொன்றிலிருந்த தேங்காய்கள், __________________ எனக் கீழே விழுந்தன., அருகிலிருந்த மான்கள் அங்குமிங்கும் _______________ ஓடின. சூல்கொண்ட மேகங்கள், _____________வெனத் திரள, பளபளவென மின்னல் மின்னியது. சற்றுநேரத்தில்,_________வென மழை பெய்ய, குரங்குகள் மரத்தின் மீது ___________வென ஏறின.

*******************************************